DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.158/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | |
|---|---|
| Name | : தனலெட்சுமி |
| Father/ Husband Name | : தனசேகரன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் நாச்சாங்குளம். கடந்த 13.01.2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் நாச்சாங்குளத்தில் உள்ள என் வீட்டை பார்த்தபோது கதவுகள் இரண்டும் உடைக்கப்பட்டு இருந்தது. பக்கத்தில் இருந்த சாட்சி இளஞ்செழியனிடம் சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தேன். பெட்ரூமில் போய் பார்த்த போது அங்கிருந்த வீட்டுப்பட்டா, நிலப்பட்டாக்கள், எங்கள் வீட்டின் உள்ள நால்வரின் ஆதார் கார்டு, ரேசன் கார்டு, துணிமணிகள் ஆகியவை எரிந்து கொண்டு இருந்தது. சாமி ரூமில் செலவுக்கு வைத்திருந்த ரொக்கப்பணம் ரூ.5000/- காணாமல் போய் இருந்தது.

2. இது சம்பந்தமாக வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எப்போது வீட்டை உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. புகாரில் அன்றைக்கு மாலை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு

கொடுத்தேன். காணாமல் போன பொருட்களை திரும்ப பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.158/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : இளஞ்செழியன்
Father/ Husband Name : நடராஜன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் நாச்சாங்குளத்தில் குடியிருந்து விவசாய வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 13.01.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு அ.சா.1 அவருடைய வீட்டை பார்த்துவிட்டு என்னை கூப்பிட்டார். நான் போய் பார்த்த போது ஒரே புகை மண்டலமாக இருந்தது. நாங்கள் தண்ணீர் ஊற்றி அணைத்தோம். தீயில் மெத்தை, ஆதார் கார்டு, சான்றிதழ்கள், ரேசன் கார்டு, இடத்து பத்திரங்கள் ஆகியவை எரிந்திருந்தது. பிறகு காவல் துறையில் அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வீட்டை எப்போது உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.